**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு - முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2020**
**C011 இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு - 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. கொடியின் மூலம் பாரதி உணர்த்துவன யாவை?
2. பாரதி தெய்வம் என்று எவற்றைக் குறிப்பிடுகிறார்?
3. பாரதியின் சமயம் எத்தகையது?
4. பாரதியார் மக்கள் சக்தியை எதற்கு ஒப்பிடுகிறார்?
5. பாரதமாதா மீது பாரதியார் பாடிய மூன்று பிரபந்தங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
6. பெண் விடுதலைக்காக என்ன முறையைக் கையாளுமாறு பாரதியார் அறிவுறுத்துகிறார்?
7. பண்டைய தமிழ் மன்னர்களின் வீரம் எந்தப் பாடல்களில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன?
8. பாரதியாருக்கு முன்பு சமுதாயச் சிந்தனை உடைய பாடல்களைப் பாடியவர்கள் யாவர்?
9. கடவுளைப் பாடும் நிலையிலிருந்து பாரதிதாசன் எந்த ஆண்டில் மாறினார்?
10. கல்வியில்லாத சமுதாயம் எது போன்றது?
11. மதுரையை யார் எரித்ததாகப் புரட்சிக் கவிஞர் கூறுகின்றார்?

12. பெற்றோர் ஆவல் என்னும் பாடலில் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ள தமிழ் இசைக் கருவி யாது?
13. சுயமரியாதை என்றால் என்ன?
14. தமிழ் நாட்டை எவ்வாறு பாரதிதாசன் வாழ்த்துகிறார்?
15. நாடகங்கள் எவற்றால் சிறப்பைப் பெறும்?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பாரதியார் தாம் இளமையில் அனுபவித்த தனிமைத் துயரினைப் பற்றி எங்ஙனம் பாடியுள்ளார்?
2. பாரதி புதுவை செல்ல நேர்ந்தமைக்குரிய காராணம் யாது?
3. இந்தியாவை வாழ்விக்க வந்த மகாத்மா என்று காந்தியைப் பாரதி பாராட்ட காரணம் என்ன?
4. பாரதியாரின் சமயக்கொள்கை குறித்து அவரது மாணாக்கர் இரா. கனகலிங்கம் கூறுவன யாவை?
5. பொறுப்பில்லாப் பெண்ணின் செயல்களைப் பாரதிதாசன் இருண்ட வீட்டில் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
6. மலையின் அழகைப் பாரதிதாசன் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?
7. பாரதிதாசன் காலத்தில் நிலவிய மூடநம்பிக்கைகள் குறித்து எழுதுக.
8. நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்பதைக் குடும்ப விளக்கில் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாரதியின் சிந்தாந்தக் கோட்பாடுகள் குயில் பாட்டில் உள்ளுறைப் பொருளாக அமைந்திருப்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) காதல், குடும்ப வாழ்வு ஆகியவற்றில் பெண் தலைமையேற்கும் நிலைக்கு உரியவள் என்பதைப் பாரதிதாசன் வழி விளக்குக.

2. (அ) தமிழ்மொழி சிறக்க, தமிழர் பெருமை தரணியில் பரவ, பாரதியார் காட்டும் வழிமுறைகளின் தேவையினை ஆய்ந்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஒரு குடும்பம் எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு இருண்ட வீடு கொண்டு விளக்குக.

3. (அ) தமிழ் கவிதை வரலாற்றில் பாரதி ஒரு திருப்புமுனையாக அமைந்ததை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ்மொழி, தமிழ் மக்கள், தமிழ்நாடு இவற்றின் மீது பாரதிதாசன் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுதலை விளக்குக.

***